REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: தை 26உ செவ்வாய் (8—2—55) ★ ★ வெளியூர்: தை 27உ புதன் (9—2—55) [இதழ் 203

நஷ்ட ஈடின்றி ஜாகீர் ஒழிப்பு!

கராச்சி, பிப். 8—

சிந்து மாநில சர்க்கார் நூற்ருண்டு காலமாக இருந்துவரும் ஜாகீர்தார்களை நஷ்ட ஈடு கொடுக்காமல் பிப்ரவரி 8-ம் நாளிலிருந்து எடுத்துக்கொள்வதென்று தீர்மானித்திருக்கிறது.

இதன் மூலம் நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்கு 10 லட்சம் ஏக்கர் நிலங்கள் பகிர்ந்து கொடுக்கப்படும் என்று கூறப்படுகிறது.

இந்த ஜாகீர் ஒழிப்பின் மூலம் சர்க்காருக்கு ரூ. 18 லட்சம் ஆண்டுதோறும் வருமானம் அதிகமாகும் என்று தெரிகிறது.

பீகார், மேற்கு வங்க எல்லையில் கெடுபிடி

வங்காளிகளிடம் பீகார் போலீசார் மிதமிஞ்சி நடந்துகொள்வதாக புகார்

எல்லையோர மாவட்டத்தில் மே. வங்க காங்கிரஸ் தலைவர் சுற்றுப்பயணம்

கல்கத்தா, பிப். 7—

பீகார் மாநிலத்தின் எல்லையில் வசிக்கும் வங்காளிகள் மீது போலீசார் மிதமிஞ்சிய வகையில் நடந்துகொள்வதாக தமக்கு வந்துள்ள எண்ணற்ற புகார்கள் மீது விசாரணை செய்வதற்காக பீகார் எல்லை மாவட்டத்தில் மேற்கு வங்க காங்கிரஸ் தலைவர் ஆதுல்ய கோஷ் சுற்றுப்பிரயாணம் ஒன்றை மேற்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

பீகார் மாநில முதன் மந்திரியான டாக்டர் ஸ்ரீகிருஷ்ண சின்ஹா, இப்போது திரு. கோஷ் அந்தச் சுற்றுப்பயணத்தை மேற்கொள்ள வேண்டியதில்லை என்றும், அதனால் எவ்வித பொது நன்மையும் ஏற்படாது என்றும், மாருக, இது அந்தச் சுற்றுப்பயணத்திற்கு ஏற்ற தருணமல்லவென்றும் கூறியிருந்தும் திரு. கோஷ் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருக்கிருர் எனத் தெரிகிறது.

திரு. கோஷ், ஏற்கனவே கடந்த சனியன்று தாம் அந்தச் சுற்றுப்பயணத்தை மேற்கொள்ளப்போவதாக பீகார் முதன் மந்திரிக்குத் தந்தி மூலம் தெரிவித்திருக்கிருர்.

பீகார் மாநில காங்கிரஸ் தலைவருக்கும் கோஷ் இதுபற்றி அறிவித்து, தம்முடன் யாரையாவது ஒரு பொறுப்பு வாய்ந்த மாநில காங்கிரஸ் உறுப்பினரையும் அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளாராம்.

தமக்கு பீகாரில் உள்ளவர்களிடமிருந்து திடுக்கிடும் வகையில் கடிதங்கள் பல வந்துள்ளதாயும், அவற்றில் பீகார் போலீசார் அவர்களுக்குச் செய்யும் கொடுமைகள் குறித்து சம்பவங்கள் பல எழுதப்பட்டிருப்பதாயும் திரு. கோஷ், பீகார் காங்கிரஸ் தலைவருக்குத் தெரிவித்திருக்கிருராம்.

ஜம்னுதாஸ் மேத்தா காலமானர்

பம்பாய் மாநில முன்னாள் நிதி மந்திரியான ஜம்னுதாஸ் மேத்தா இன்று காலை 10 மணிக்கு பம்பாய் யாட்டியா மருத்துவ மனையில் காலமானர்.

போலீசாரின் போராட்டத்திற்கு — மேற்கு வங்க அரசாங்கம் பணிவு!

சம்பள உயர்வு இந்த ஆண்டு முதல் தருவதாக அறிவிப்பு

மேற்கு வங்க போலீசார் பெற்ற மகத்தான வெற்றி

கல்கத்தா, பிப். 7—

மேற்கு வங்க மாநிலத்தில் பணிபுரியும் போலீசாருக்கு சம்பள உயர்வு தர சர்க்கார் சம்மதித்துவிட்டதாக அறிவித்துள்ளது.

கடந்த டிசம்பர் மாதத்தில் சம்பள உயர்வு கோரி, ஆயிரக்கணக்கில் மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள போலீசாரும் சிறை வார்டர்களும் உண்ணாவிரதம் மேற்கொண்டு கிளர்ச்சி துவக்கினர்.

எழு நாட்களாக அவர்கள் தொடர்ந்து பட்டினிப் போரில் ஈடுபட்டிருந்தனர். பின், சர்க்கார் பணிந்து வந்து அவர்களது சம்பள உயர்வு கோரிக்கையை வரும் வரவு-செலவுத் திட்டத்தின்போது கவனிப்பதாகக் கூறியிருந்தனர்.

இப்போது சர்க்கார், இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலேயே அவர்களின் சம்பளத்தை உயர்த்தத் தீர்மானித்துவிட்டனராம். இதனுல் சர்க்காருக்கு ஆண்டுதோறும் 64 இலட்ச ரூபாய் அதிகம் செலவாகும் என்று கூறப்படுகிறது.

'தினத் தந்தி' தலைப்பு தவருனது

தோழர் மு. கருணநிதி மறுப்பு

"சென்னை பிப். 7-ந் தேதி 'தினத் தந்தி' பத்திரிகையில், விரைவில் கூட இருக்கும் தி. மு. கழகப் பொதுக் குழுவில், போராட்டம் பற்றிய தீர்மானம் வரப்போகிறதென்று நான் சொன்னதாகத் தலைப்பு கொடுத்து செய்தி வெளியாகியிருக்கிறது.

"'தினத் தந்தி' நிருபர் என்னிடம் வந்து, பொதுக் குழு பற்றிய விபரங்களைக் கேட்டபோது, 'எதுவும் நான் இப்போது சொல்வதற்கில்லை,' என்று கண்டிப்பாகக் கூறினேன்.

"'தினத் தந்தி' செய்தியின் உட்பகுதியில், நான் கூறியவைகள் விளக்கமாக இருந்தாலுங்கூட, அதன் தலைப்பும், செய்தியின் இறுதியிலுள்ள 'போராட்டத்தைப் பற்றித் தீர்மானிக்கலாம்' என்ற ஹேஷ்யம் கலந்த வாசகமும் திரித்துப் பிரசுரிக்கப்பட்டவைகளாகும்.

"கழகத்தின் திட்டங்களும், நடவடிக்கைகளும், அது பற்றிய அறிவிப்புகளும், பொதுக் குழுவின் முடிவுக்குப் பிறகும், பொதுச்செயலாளர் அவர்களின் ஒப்புதல் பெற்றும் வெளியிடப்பட வேண்டியவை—என்பதை நான் நிருபரிடத்தில் வலியுறுத்திச் சொல்லியுங்கூட, இம்மாதிரி தலைப்புள்ள ஒரு செய்தி வெளியிட்ட செயல் மிகவும் கண்டிக்கத்தக்கதாகும்—என்று தெரிவித்துக் கொள்கிறேன்."

2,800 ஓராசிரியர் பள்ளிகள்

சென்னை மாநிலத்தில் ஆரம்பிக்கப்பட்டன

சென்னை, பிப். 7—

படித்தவர்களிடையே காணப்படும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க மத்திய சர்க்கார் திட்டப்படி ஆரம்பிக்கப்பட்டிருக்கும் பள்ளிகள் பற்றிய செய்திகளை எழுத்து மூலமாக சென்னை சட்டசபையில் நிதிஅமைச்சர் தெரிவித்தார்.

மாவட்டவாரியாக ஆரம்பிக்கப்பட்ட பள்ளிகளின் எண்ணிக்கை பின்வருமாறு:—

செங்கற்பட்டு — 143; தென் ஆற்காடு—236; இராமநாதபுரம்—229; தஞ்சாவூர்—196; மதுரை—226; வடாற்காடு — 218; சேலம்—638; கோவை—326; திருச்சி—312; நீலகிரி—1; மலபார்—90; தென்கன்னடம் — 143.

திறக்கப்பட்ட பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை 2,800-ஆகும்.

இப்பள்ளிகள் அமைப்பதில், அதிகப் பள்ளிக்கூடங்கள் இல்லாத மக்கள் நெருக்கம் அதிகமுள்ள பகுதிகளுக்கே அதிக சலுகை காண்பிக்கப்பட்டதாக கூறப்பட்டது.

ஆசிரியர்களை நியமிக்கும் பொறுப்பு மாவட்டக் கழகங்களைச் சார்ந்ததாகுமென்றும், வேலை தேடித் தரும் நிலையம் மூலமாக மனுக்கள் கோரப்பட்டன என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

5000 ஆசிரியர்கள் வேலை நிறுத்தம்

ஒரு நாள் உண்ணாவிரதம் நடைபெற்றது

கயா, பிப். 6—

கயா மாவட்டத்தில் உள்ள 15,000 ஆரம்ப, நடுத்தரப் பள்ளிகளில் பணிபுரியும் 5000 ஆசிரியர்கள் இன்று அடையாள வேலை நிறுத்தம் செய்தனர்.

கயா நகரசபைப் பள்ளிகளைச் சேர்ந்த 300 ஆரம்ப ஆசிரியர்கள் செய்துவரும் வேலை நிறுத்தத்திற்கு அனுதாபம் காட்டும் முறையிலேயே இவர்கள் வேலைநிறுத்தம் செய்துள்ளனர்.

கயா நகரசபைப் பள்ளி ஆசிரியர்கள் ஜன. 7-ந் தேதியிலிருந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். பிராவிடண்டு பண்டு வசதிகள் கோரியும், நவம்பர், டிசம்பர் மாத சம்பளம் தேவை என்றும் இவர்கள் வேலை நிறுத்தம் செய்கின்றனர்.

ஆரம்ப ஆசிரியர்கள், நகரசபையில் 75 பள்ளிகளில் பணியாற்றுகிருர்கள். இவர்களில் 50 பேர் பெண்கள். இவர்கள் அனைவரும் இன்று ஒரு நாள் உண்ணாவிரதம் இருந்தார்களாம்.

உலோக உலைக்களங்களுக்கு உபயோகிக்கப்படும் விசேட செங்கல்களைத் தயாரிப்பதற்கு உபயோகப்படக் கூடிய 'மாக்னசைட்' கனிப்பொருள்களின் புதிய படிவங்கள் உத்தர பிரதேச மாநிலத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சேலத்தில் கிடைக்கும் இரும்பு - அலுமினியம்

2-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க சென்னை முயற்சி

சென்னை, பிப். 7—

சேலம் பகுதியில் காணப்படும் இரும்பு சேர்வராயன் மலைத் தொடரில் கிடைக்கும் அலுமினியம் ஆகியவைகளைப் பயன்படுத்தி தொழில்களை ஆரம்பிக்க வேண்டுமென்றும், இவற்றை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்குமாறும் திட்டக் கமிஷனை சென்னைசர்க்கார் கோரியிருக்கிறதாம்.

இச்செய்தியை சென்னை சட்டசபையில் என். கே. பழனிசாமியின் கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையில், அமைச்சர் பக்தவத்சலம் தெரிவித்து, திட்டக் கமிஷனின் கருத்து எதிர்பார்க்கப்படுகிறது என்றும் குறிப்பிட்டார்.

தேசீய மலேரியா தடுப்புத் திட்டத்தின் கீழ் 10 கோடி பேருக்கு மலேரியா தாக்குதலைத் தவிர்ப்பதற்கான பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

மீனுட்சியம்மன் கோயில் குருக்களின் குடிபோதை

கைது செய்து வழக்கு தொடரப்பட்டுள்ளது

மதுரை மீனுட்சி அம்மன் கோவிலுக்குள், குடிபோதையில் குழப்பம் செய்துகொண்டிருந்ததாகக் கூறப்படும் முத்துராமய்யர் மகனும், மேற்படி கோவில் குருக்களுமான கிட்டு அய்யரை போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் ஜி. சுப்பிரமணியம் நேற்றுகாலை கைது செய்திருக்கிருர்.

மீனுட்சி அம்மன் கோவில் மடைப்பள்ளியில் பொங்கல், புளியோதரை, வடை தயாரிக்குமிடம்) வேலைபார்க்கும் மேற்கண்ட கிட்டு அய்யர், நேற்று காலையில் குடிபோதையில் கோவிலுக்குள் குழப்பம் விளைவித்துக்கொண்டிருந்ததாகக் கோவில் அதிகாரிகள் போலீசாருக்குத் தகவல் கொடுத்ததின் பேரில், போலீசார் கிட்டு அய்யரை கைது செய்து டாக்டர் முன்பு ஆஜர் செய்தனர்.

மேற்கண்ட கிட்டு அய்யர் குடிபோதையிலிருப்பதாக 'சர்டிபிக்கேட்' கொடுத்ததின் பேரில் அவர்மீது மதுவிலக்குச் சட்டப்படி வழக்கு பதிவு செய்திருக்கின்றனர்.

கிட்டு அய்யர் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டிருக்கிருர். (ந நி.)

சிங்கப்பூர், பிப். 3—

மலேயாவிலிருக்கும் வெவ்வேறு இன மக்களின் ஒருமித்த ஒத்துழைப்பிலேயே மலேயாவின் வருங்காலம் உள்ளதென்றும், மலேயாவில் வாழும் இந்தியர்கள், மலேயருடனும், சீனருடனும், இதர மக்களுடனும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் இந்தியப் பிரதமர் பண்டிதர் நேரு கூறியிருக்கிருர்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 8—2—1955 செவ்வாய்

பாலப் பருவம்!

ஆவடியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் வரவேற்புரை ஆற்றிய திருமதி அம்புஜம்மாள், 'தென்னாட்டை வடநாடு அலட்சியம் செய்கிறது,' என்று எடுத்துக் கூறியதைப் பொது மக்கள் அறிவார்கள்.

"மிகப் பெரிய தொழிற்சாலைகளை அமைப்பதில் எங்கள் நாட்டின் மீது போதுமான கவனம் செலுத்தப்படவில்லை என்று கூற விரும்புகிறோம்; சரியோ தவறோ, இதை நீங்கள் தெளிவாக உணர வேண்டுகிறோம்," என்று அவ்வரவேற்புரையில் காணப்பட்டது.

கோவை நகருக்கு அருகே பெரியநாய்க்கன்பாளையத்தில், ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய விவாத அரங்கு ஒன்று நடைபெற்றது. அந்த அரங்கில் சென்னை நிதி அமைச்சர் சுப்பிரமணியம் பேசினார்.

"தென்னாட்டிற்கு முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் போதுமான பலன் தரவில்லை—தருமாறு திட்டம் வகுக்கப்படவில்லை," என்று கூறியுள்ளார்.

"மின்சாரக் கருவிகள் உற்பத்தித் தொழிற்சாலை போன்ற பெரிய தொழிற்சாலைகளை தென்னாட்டிலும் ஆரம்பிக்க வேண்டும்; சில குறிப்பிட்ட பகுதிகளில் மட்டும் செல்வம் குவியுமாறு அனுமதிப்பதும், அதற்கான முறையிலேயே திட்டங்கள் வகுப்பதும் கூடாது; அப்படிச் செய்தால், இப்போது காங்கிரசாருக்கு உள்ள வலிமை தென்னாட்டில் அழிந்து போகும்," என்று அமைச்சர் சுப்பிரமணியம் பேசினார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

சென்னையில் நடைபெற்ற அகில இந்திய அச்சகத்தார் மாநாட்டில் பேசிய கவர்னர் பிரகாசா, வடநாட்டுத் தொடர்பிலிருந்தும், ஆதிக்கத்திலிருந்தும் தென்னாட்டைப் பிரித்துப் பாதுகாக்க வேண்டுமென்று தென்னாட்டில் வலிமை மிக்க இயக்கம் ஒன்று இருப்பது குறித்துப் பேசியிருக்கிறார்.

இந்தியாவின் ஒற்றுமை குலையாமல் இருக்க இதுபோன்ற உணர்ச்சிகளை எதிர்த்துப் போராட அகில இந்தியாவிலும் இருக்கிற பத்திரிகையாளர்களை முன்வருமாறு கவர்னர் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

"**திராவிட நாடு பிரிவினை கோரிக்கை வலுத்து வருகிறது,**" என்பதைத்தான் மூன்று பேரும் குறிப்பிட்டுக் கூறுகிறார்கள்; ஆனால், நேரடியாகக் கூறுவதற்குப் போதுமான மனோவலிமை இல்லாத காரணத்தால், எந்தெந்த விதத்திலோ எடுத்துச் சொல்லி பண்டித நேருவை எச்சரிக்கிறார்கள்.

"எங்களுக்குப் போதுமான பங்கு இல்லை; சரியோ தப்போ, தெளிவாக இதைத் தெரிந்துகொள்ள வேண்டும்"—இது ஒரு முறை; கொஞ்சம் கனிவுடன் சொல்லும் போக்கு!

"நாட்டின் ஒரு பகுதியில் மட்டும் செல்வம் குவியக் கூடாது; தென்னாட்டிலும் தொழிற்சாலை அமையுங்கள்; இல்லையேல், விரும்பத்தகாத அரசியல் விளைவுகள் ஏற்படும்"—இது, அடுத்த கட்டம்; கொஞ்சம் புள்ளி விபரங்களையும் சேர்த்துக் கொண்டு நிமிர்ந்து நின்று சொல்லும் போக்கு!

இவர்கள் இரண்டு பேரும் திராவிடத்தின் இன்றைய நிலைமையை இன்னும் கொஞ்சம் தெளிவாக சொல்லியிருக்கலாம் ஏனென்றால், அவர்களும் திராவிட நாட்டின் குடிமக்களாக வாழ உரிமை பெற்றிருக்கிறார்கள்.

"திராவிட நாடு பிரிவினைக் கோரிக்கை வலுத்து வருகிறது; தடுக்க முடியாதபடி—அடக்க முடியாதபடி அப்பிரிவினை கோரிக்கை வலிவு பெற்றுவிட்டது," என்று பண்டித நேருவுக்கு விளக்கமாக அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கலாம்—அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு அவர்களுக்கு இருக்கிறது என்ற காரணத்தால்!

ஆனால், கவர்னர் பிரகாசாவின் பேச்சிலே காணப்படும் கருத்து, கனம் சுப்பிரமணியம் அவர்கள் கூறியுள்ள கருத்தைவிட கொஞ்சம் அதிகப்படியாக தாண்டிச் சென்றுள்ளது.

"நான் இப்பிரச்சினையில் மிகவும் தெளிவாக இருக்க விரும்புகிறேன்; தென்னாட்டின் மீது வடநாடு ஆதிக்கம் செலுத்துகிறது என்ற உணர்ச்சி தெற்கே இருக்கிறது; அந்த உணர்ச்சி புரிந்துகொள்ள முடியாத ஒன்றாக இருக்கிறது," என்கிறார், கவர்னர் பிரகாசா.

வடநாட்டில் உள்ள பள்ளிகளில் சொல்லித்தரப்படும் சரித்திரப் புத்தகங்கள் தென்னாட்டின் பெருமையைப் பற்றிச் சொல்வதில்லை; வடநாட்டு நிகழ்ச்சிகளையே அந்தப் புத்தகங்கள் எடுத்துக் கூறுகின்றன; இதன் காரணமாகத்தான் வடநாடு—தென்னாடு உணர்ச்சி தோன்றியுள்ளது," என்று கவர்னர் பிரகாசா, தனது பேச்சில் கூறுகிறார். அதே நேரத்தில், அந்த உணர்ச்சி புரிந்துகொள்ள முடியாதவாறு இருக்கிறதென்றும் கூறுகிறார்.

சரித்திர புத்தகங்களைப்பற்றி கவர்னர் கூறிய கருத்து, வடநாட்டிற்கு மட்டுமல்ல; தென்னாட்டிற்கும் பொருந்தும்.

திராவிடத்துப் பள்ளிக்கூடங்களில் காணப்படும் சரித்திரப் புத்தகங்களும்கூட, வடநாட்டு சண்டைகளையும், அங்கே வாழ்ந்து மாண்டுபோன மன்னர்களைப் பற்றியுமே எடுத்துச் சொல்கின்றன.

அதற்குக் காரணம், சரித்திரப் புத்தகங்களை எழுதியவர்கள் திராவிடத்தின் பெருமையை விரும்பாத, அதன் மக்களை அடிமையாக்க விரும்பிய இனத்தவர்கள்; இதை கவர்னர் அவர்கள் உணரலாம்.

இப்பிரச்சினையைவிட, திராவிட நாடு பிரிவினைக்காகப் போராட தென்னாட்டில் வலிமை மிக்க இயக்கங்கள் இருப்பதை ஒப்புக்கொள்ளும் கவர்னர் அவர்கள், பிரிவினை உணர்ச்சியை எதிர்த்துப் போராட அகில இந்தியாவிலும் உள்ள பத்திரிகையாளர்களை அழைக்கிறார்; இது, பயன்படாத ஒரு பிரச்சினை!

அகில இந்தியாவிலும் உள்ள பத்திரிகையாளர்கள், திராவிட நாடு பிரிவினை கோரிக்கை என்பது எப்படிப்பட்டது என்ற உண்மையை சென்னை கவர்னர் போன்றவர்களுக்குத் தெரியக் கூடாது என்பதற்காக நாள்தோறும் திராவிட இயக்கச் செய்திகளை இருட்டடிப்பதிலும், திரித்துக் கூறுவதிலும் முனைந்திருக்கும் போக்கினர்; அவர்களா ஒரு விடுதலை இயக்கத்தைத் தடுக்கும் வலிமை பெற முடியும்?

திராவிட மக்களின் விடுதலை இயக்கம் இப்போது திராவிடரில் உள்ள மிகப் பெரிய பத்திரிகையாளர்களால் தடுத்துவிடக்கூடியதல்ல என்பதை கவர்னர் உணர்ந்துகொள்ளும் காலம் சீக்கிரமே வரும்.

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்.

திராவிட இயக்கத்தை 'நாஸ்திகர்கள் இயக்கம்' என்று நா கூசாது ஏசிவந்த காலம் இப்போது இல்லை; அப்படிப் பேசும் 'பண்பு' படைத்தவர்கள் எங்கோ மூலைமுடுக்குகளில்தான் உள்ளனர்.

இப்போது, வடநாட்டுக் காங்கிரஸ் ஏகாதிபத்திவாதிகளுக்கு, 'நாம் யார்' என்பதை மறைமுகமாகச் சொல்லப் பார்க்கிறார்கள்.

வரவேற்புரையில்—விவாத அரங்கில்—அச்சகத்தார் மாநாட்டில் இதுபோன்ற இடங்களில் பேசுகிறார்கள்—'பால பருவம்' அல்ல இந்தப் போக்கு—இப்படி மறைத்து பேசுவது நீண்ட காலத்திற்கு பயன்படாது; ஒரு நாள் வரும்—அன்று அனைவரும் பகிரங்கமாகப் பேசுவார்கள்; அந்த நாள் வரும்வரை, இப்படி அவர்கள் பேசிக்கொண்டிருப்பது நாட்டு விடுதலை இயக்க சரித்திரங்களில் காணப்படும் சாதாரண நிகழ்ச்சிகள் போன்றதாகும்!

ரூர்கேலா உருக்கு ஆலை உற்பத்தி அளவு இரட்டிப்பாகிறது

யூகோ நிபுணர் ஆலோசகராக நியமனம்

திட்டம் அமுலாக ஜரூர் ஏற்பாடுகள்

ஒரிசாவில் ரூர்கேலா எனுமிடத்தில் உருக்கு ஆலை ஒன்றை நிறுவுவதற்கு இந்திய அரசாங்கம், ஜெர்மன் கம்பெனி ஒன்றுடன் ஒப்பந்தம் செய்துள்ளது அல்லவா?

க்ரப்ஸ் டெமாக் என்ற அந்தப் பிரபல ஜெர்மன் கம்பெனியார் தந்த இறுதித் திட்டத்தில் சில மாறுதல்களைச் செய்யுமாறு மத்திய அரசாங்கம் கோரியுள்ளதாம்.

முன்பு ஆரம்ப காலத்தில் 5 லட்சம் டன் உருக்கு உற்பத்தியாவதற்குத் தேவையான திட்டம் தீட்டப்பட்டிருந்தது. இப்போது துவக்கத்திலேயே 10 லட்சம் டன் உருக்கு உற்பத்தியாவதற்குத் தகுந்தவகையில் திட்டத்தை மாற்றியமைக்குமாறு கோரியுள்ளார்களாம். இந்த மாற்றம், திட்டம் நிறைவேறுவதற்காகக் குறிக்கப்பட்டுள்ள காலத்தில் எவ்வித தாமதத்தையும் உண்டுபண்ணாது என்று கூறப்படுகிறது.

'இந்துஸ்தான் ஸ்டீல் கார்ப்பரேஷன்' என்ற நிறுவனத்தின் டைரக்டர்கள் இந்த திட்டம் பற்றிய ஜெர்மன் கம்பெனியின் அறிக்கையை இம்மாத இறுதியில் பரிசீலிப்பர் என்று தெரிகிறது. அவர்களுக்கு உதவியாக டாக்டர் கிளினார் என்ற யூகோ நிபுணர் இருப்பார். அவர் அந்த 'கார்ப்பரேஷனின்' ஆலோசகராக நியமனம் பெற்றுள்ளார்.

இன்னும் ஆறு வார காலத்தில் திட்டத்திற்குத் தேவையான இயந்திரங்களுக்கும், சாதனங்களுக்குமான 'டெண்டர்'கள் உலகெங்கணுமிருந்து கோரப்படும் என்று தெரிகிறது.

டாக்டர் கிளினார் ஏற்கனவே வேலை ஒப்புக்கொண்டாயிற்றென்றும், அவர் இப்போது ஜெர்மனியில் உள்ள 'கம்பெனி'கள் சிலவற்றுடன் பேச்சுவார்த்தைகள் நடத்திக் கொண்டிருப்பதாயும், இந்தியாவிற்கு சில நாட்களில் வந்து சேர்வார் என்றும் அறியக் கிடக்கிறது.

முகம்மதிய நாகரீகத்தை பிரதிபலிக்கும் நூல்கள் தமிழில் நிரம்ப வேண்டும்

சென்னை, பிப். 7—

"முஸ்லிம் பண்பாடுகளையும், நாகரீகத்தையும் பிரதிபலிக்கும் நூல்கள் தமிழ் மொழியில் இன்னும் அதிகமாக வெளிவர வேண்டும்,"

என்று, கொழும்பு ஜாகிரா கல்லூரித் தலைவர் ஏ. எம். ஏ. அஜீஸ் இங்கு நடைபெற்ற முஸ்லிம் கல்வி மாநாட்டில் தமிழ் முஸ்லிம் கவிஞர்கள் தின விழாவிற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இந்தியா — இலங்கை கலாச்சாரங்களிடையே அதிக ஒற்றுமை உள்ளதென்றும், இரு நாட்டுத் தமிழ் முஸ்லிம்களிடையேயுள்ள உறவுகள் கடந்த பல ஆண்டுகளாகப் பலம் பெற்று வருகிறதென்றும், இலங்கை முஸ்லிம்களில் பெரும்பான்மையோர் தமிழ் மொழியையே தாய் மொழியாகக் கொண்டவர்களென்றும், முஸ்லிம்களின் கல்வித் திட்டத்தில் அரபு மொழிக்கும் தகுந்த இடம் அளிக்க வேண்டுமென்றும் தமது தலைமையுரையில் அவர் குறிப்பிட்டார்.

மேலும் அவர், தமிழ் முஸ்லிம் இலக்கியம் இன்னும் அதிகமாக வெளிவரவேண்டுமென்றும், தென்னிந்திய முஸ்லிம் சங்கம் இதற்கான தகுந்த நடவடிக்கைகள் எடுக்குமெனத் தாம் நம்புவதாகவும் கூறினார்.

அடுத்துப் பேசிய திரு. ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள், தமிழ் இலக்கியங்களில் அரபுச் சொற்கள் மலிந்து கிடக்கின்றன என்றும், அவையெல்லாம் சரியானபடி விளக்கப்பட்டால் முஸ்லிம் அல்லாதாரும் இஸ்லாமிய இலக்கியங்களைப் படிக்க முன்வருவர் என்றும், கண்ணியமான — இன்றியமையாத வார்த்தைகள், சொற்கள் பிற மொழிகளிலிருப்பினும் அவற்றை எடுத்தாளத் தமிழ் மொழி தயங்காது என்றும் குறிப்பிட்டார்.

மத்தியப் பிரதேச இரும்பு ஆலை

ரஷ்ய நிபுணர்கள் இடத்தை பார்வையிடுகின்றனர்

நாகபுரி, பிப். 5—

மத்தியப் பிரதேசத்தில் ரஷ்ய நிபுணர்களால் அமைக்கப்படும் இரும்புத் தொழிற்சாலைக்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெறுகின்றன.

மத்தியப் பிரதேச சர்க்கார், தொழிற்சாலை அமைக்கப்படும் பகுதியில் புது கிராமங்கள் பற்றி உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

துர்க் மாவட்டத்தில் சுமார் 25 சதுர மைல் பரப்புள்ள நிலங்கள் தேவை என்று சர்க்கார் அறிவித்திருக்கிறது

இப்போது பிப்ரவரி 12, 15-ந் தேதிகளில், ரஷ்ய நிபுணர்கள் எந்த இடத்தில் தொழிற்சாலை அமைப்பது என்று தேர்ந்தெடுக்க அப்பகுதிக்கு செல்வார்கள் என்று தெரிகிறது.

இரயில்வே பிரயாணிகட்கு வசதிகள்

பம்பாய், பிப் 6—

இரயில்வே பிரயாணிகளுக்கு வசதி செய்து தரும்பொருட்டு ஒவ்வொரு ஆண்டிலும் குறைந்தது 5 கோடி ரூபாயாவது இரயில்வே வரவு-செலவுகளில் (பட்ஜெட்) ஒதுக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தி, அகில இந்திய போக்குவரத்து சாதன உபயோகிப்போர் மாநாட்டில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

சிற்சில இரவுக் கால இரயில் வண்டிகளில் மூன்றாவது வகுப்புப் பிரயாணிகள் தூங்குவதற்கென ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்றும் கோரப்பட்டது.

இரண்டாவது உலக யுத்தத்திற்கு முன்னிருந்த நிலவரப்படி, யூனிட்டுக்கு அரை அணா கட்டணம், பிளாட்பாரம் டிக்கட் ஒரு அணா, குறைந்த கட்டணத்தில் வாரக் கடைசி 'ரிட்டர்ன்' டிக்கட்டுகள், 100 மைலுக்கு மேல் இறங்கி ஏறும் வசதிகள், சில மார்க்கங்களில் (ரூட்) உள்ள 'சர்சார்ஜ்' நீக்குதல், யுத்தத்தின்போது ரத்து செய்யப்பட்டிருந்த சில பிரயாணிகள் வண்டிகளை மீண்டும் விடுதல்—இவை போன்ற வசதிகளை மீண்டும் செய்து தரும்படி கேட்டுக்கொண்டும் மாநாட்டில் தீர்மானம் நிறைவேறியுள்ளது.

நம்பிக்கை இழக்கின்றனர்

கோவாவிலுள்ள 'ரெஜிதார்கள்' என்றழைக்கப்படும் கிராம மணியக்காரர்களிடமும் கோவா சர்க்கார் தனது நம்பிக்கையை இழந்துவிட்டதாக அறியக்கிடக்கிறது.

இந்த நம்பிக்கைக் குறைவின் காரணமாக, மணியக்காரர்களின் வேலைகளையெல்லாம் மேற்பார்வையிட ஐந்து கிராமங்களின் குழுவிற்கு ஒருவர் வீதம் போர்த்துகீசிய அதிகாரிகள் நியமிக்கப்பட்டுவிட்டனர் என்றும் செய்திகள் அறிவிக்கின்றன.

இதுவரையிலும் ஒவ்வொரு மணியக்காரரும் மாவட்டக் கலெக்டருக்கு மட்டுமே நேரிடையாக உட்பட்டவர்களாயிருந்தார்களாம்.

மேலும், போர்த்துகீசிய சிப்பாய்கள், எல்லா கிராமங்களிலும் சுற்றித் திரிந்து இந்திய ஆதரவாளர்கள் பற்றி விசாரிப்பதோடு கோவாவை விட்டு வெளியேறி இந்தியாவுக்குச் சென்றுவிட்டவர்கள் பற்றிய தகவல்களைச் சேகரித்து வருவதாகவும் கோவா தேசீய வட்டாரங்கள் கூறுகின்றன.

மக்களின் பொது வாழ்க்கையில் இராணுவம் குறுக்கிட தலைப்பட்டுள்ளது — கோவா பகுதிகளில் இராணுவ ஆட்சி ஏற்பட்டுவிடுவதற்கான ஆரம்பம் என்று இங்குள்ள தேசீயவாதிகள் அஞ்சுகின்றனராம்.

நிறவெறியை எதிர்த்து அறப்போர்

வெள்ளையரின் அநாகரீகப் போக்கிற்குக் கண்டனம்

கவண்ட்ரி (இங்கிலாந்து) பிப். 7—

இங்குள்ள வெள்ளையர் ஒருவருக்குச் சொந்தமான ஓட்டல் ஒன்றில் இரண்டு அறைகளில் வெள்ளையரல்லாதார் பிரவேசிக்கக் கூடாதென தடை விதிக்கப்பட்டிருந்ததை எதிர்த்து அங்குள்ள லிபரல் கட்சி உறுப்பினர்கள் 50 பேர் உட்பட பல இந்தியர்களும் மறியல் செய்திருக்கின்றனர்.

'நிறத் துவேஷ ஓட்டல்களைப் பகிஷ்கரியுங்கள்,' 'காமன்வெல்த் பிரஜைகளுக்கு லிபரல் கட்சி சம உரிமை கோருகிறது'—இவை போன்ற வாசகங்களடங்கிய அட்டைகளைத் தாங்கிய வண்ணம் அந்த ஓட்டலின் முன்னால் மறியல்காரர்கள் கொஞ்ச நேரம் அங்குமிங்கும் நடந்துகொண்டிருந்திருக்கின்றனர்.

அந்த ஓட்டலுக்கு வெளியே மேற்படி மறியல் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, ஓட்டலின் உள்ளே சுமார் 30 இந்தியர்கள் இருந்தனராம். உடனே, மறியல் செய்ய வந்த குழுவினரின் தலைவர் உள்ளே நுழைந்து, அந்த இந்தியர்களிடம் வெளியேறச் சொல்லி, அவர்கள் வெளியேறுவதின் மூலம் தங்கள் கண்டனத்தைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளவே, அந்த 30 இந்தியர்களும் ஓட்டலை விட்டு வெளியேறிவிட்டனராம்.

வெள்ளையரல்லாதார் மீது தமக்கு தனிப்பட்ட குறையேதும் இடையாதென்றும், அவரது ஓட்டல் வாடிக்கைக்காரர்கள் தத்தம் குடும்பங்களுடன் வந்து கருப்பர்களின் மத்தியில் உட்கார்ந்து உண்ண விரும்பாமல் தங்களுக்கென தனி அறைகள் ஒதுக்கித் தரும்படி கேட்டதாகவும், அவர்கள் கோரிக்கைக்குத் தாம் இணங்கியே மேற்கண்டபடி அறைகளைப் பிரித்து வைத்ததாகவும் அந்த ஓட்டல் சொந்தக்காரர் கூறியிருக்கிறார்.

மேற்படி தடையை மாற்ற அவருக்கு விருப்பமில்லையாம்.

'வெள்ளையரல்லாதாருக்கு மது விற்க மறுத்தார்' என்ற காரணங் காட்டி அவரது மது விற்பனை அனுமதியை (லைசென்ஸ்) ரத்து செய்ய நீதிபதியிடம் கோரப்பட்டதற்கு, அனுமதி வழங்கும் நீதிபதிகள், அக்கோரிக்கையை நிராகரித்துவிட்டனர் என்று கூறப்படுகிறது.

இரண்டு இரயில்வே நிலையங்களும் தொடர்ந்து நீடித்து இருக்குமென தென்பகுதி இரயில்வே அதிகாரிகள் கூறியுள்ளனர்.

சென்னை அரசாங்கம், உருவாக்கப்பட்ட ஆவடியை ஒரு'மாதிரி' காலனியாக்குவதுபற்றி ஒரு முடிவுக்கு வரும் வரை, அந்த நிலையங்களை நீடிப்பது என்று முடிவு செய்துள்ளனராம்.

மாநாட்டிற்கு வந்திருந்த பண்டிதநேரு, "இவ்வளவு அழகாக சுகாதாரத்துடன் கூடிய வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த இடத்தை ஒரு நல்ல காலனியாக உருவாக்கலாம்; தரையை செப்பனிடவும், வேறு பல வசதிகள் செய்யவும் செலவிடப்பட்ட பணம் வீண்போகத் தேவையில்லை," என்று கருத்தறிவித்திருந்தாராம்.

எகிப்து தூதுவராலயத்தில்

துப்பாக்கி வேட்டு!

நியூயார்க்கிலுள்ள எகிப்து தூதுவராலயத்திலுள்ள ஒரு பலகணி வழியாக யாரோ ஒருவர் துப்பாக்கியால் 6 தோட்டாக்கள் சுட்டாராம்.

மற்றொரு கட்டிடத்தின் மாடியிலிருந்து அந்த நபர் சுட்டதாகவும், போலீசார் விரைவதற்குள் அவர் ஒரு மோட்டாரில் ஏறிச் சென்று தப்பிக்கொண்டதாகவும் கூறப்படுகிறது

புதிய மாவு மில்!

சென்னை, பிப். 7—

சென்னை ஒட்டேரியிலுள்ள 'செஞ்சுரி' மாவு மில்லை, மத்திய சர்க்கார் உணவு உதவியமைச்சர் எம். வி. கிருஷ்ணப்பா இன்று திறந்துவைத்தார். இந்தியாவிலேயே முதன் முறையாக 'நியூமாட்டிக்' முறையில் இயங்கும் இயந்திரம் இதுதான். இந்த இயந்திரத்திற்கென நான்கு அடுக்குகள் கொண்ட கட்டிடம் ஒன்று கட்டப்பட்டுள்ளது.

"நிறவெறி மிகுந்த ஆப்பிரிக்காவிற்கு செல்ல மாட்டேன்"

வெள்ளையரின் போக்கிற்கு வெள்ளையரே தரும் சூடு!

பிரிட்டனிலுள்ள பிரபல நாட்டிய, வாத்தியக் குழுவின் தலைவரான ஜானி டாங்க்வர்த் என்பவர், தமது குழுவினருடன் தென் ஆப்பிரிக்கா சென்று அங்கே தமது நிகழ்ச்சிகளை நடத்த முடியாதென்றும், அதற்காக தமக்கு அளிக்கப்படுவதாகக் கூறப்பட்ட 10,000 பவுனையும் நிராகரித்து விட்டதாகவும் கூறப்படுகிறது.

தமக்கு எவ்வளவு பணம்தான் கொடுத்தாலும் நிறவெறி மலிந்துள்ள தென்னாப்பிரிக்காவுக்கு வர தமக்குக் கொஞ்சங்கூட பிரியமில்லை என்றும் அவர் தெரிவித்திருக்கிறாராம்.

சென்ற ஆண்டில் அவர் தென்னாப்பிரிக்காவில் சுற்றி, டிரவர் ஹடில்ஸ்டோன் எனும் பாதிரியாரிடம் தர்ம காரியங்களுக்கென நிதி திரட்டிக் கொடுத்தாராம். அந்தப் பாதிரியார் நிறவெறியை எதிர்ப்பவர் என்றும், கலாச்சார பகிஷ்காரத்தை மேற்கொள்ளும்படி அவர்தான் வேண்டுகோள் விடுத்தார் என்றும் கூறப்படுகிறது.

மேற்படி நாட்டிய, வாத்தியக் குழுவில் இடம் பெற்றிருப்பவர்கள் அனைவரும் வெள்ளையராயிருந்தாலும், வாய்ப் பாட்டுக்கு மட்டும் வெள்ளையரல்லாத ஒரு ஆணும், ஒரு பெண்ணும் இருக்கின்றனராம்.

குடந்தை இளைஞர் தமிழ் மன்றம்

30—1—55 மாலை 7 மணிக்கு, மேற்படி மன்றப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெற்றபோது, 17—10—55-ல் நடந்த கூட்ட வரவு-செலவு ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், தோழர் செ. ரா. ராதாகிருட்டினன் விலகல் கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பின்னர், 20—2—55-ல் ஒரு பொதுக் கூட்டம் நடத்துவதென்றும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

ஐந்தாண்டுத் திட்ட கால ஆரம்பத்திலிருந்து 1954 ஜூலை மாதம் வரை, நட்புறவுள்ள அந்நிய நாடுகளிலிருந்து நிதி உதவியாக இந்தியாவுக்குக் கிடைத்துள்ள தொகை மொத்தம் ரூ. 230 கோடி ஆகும்

பிரிட்டிஷ் துணிகளுக்கு இந்தியா விதிக்கும் வரி

இங்கிலாந்து மக்கள் சபையில் பேச்சு

இங்கிலாந்து நாட்டு துணிகள் இந்தியாவில் இறக்குமதி செய்யப்படுவதற்கு எவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றன — இந்தியா அத்துணிகளுக்கு விதிக்கும் சுங்க வரி எவ்வளவு அதிகமாயிருக்கிறது— இதனால், பிரிட்டனின் துணி வியாபாரம் எவ்வளவு பாதிக்கப்படுகிறது—என்பது பற்றி இங்கிலாந்து மக்கள் சபையில் பேசப்பட்டிருக்கிறது.

இந்தியத் துணிகள் இங்கிலாந்தில் இறக்குமதியாவதற்கு நிரம்ப சுதந்திரம் இருப்பதாயும், ஆனால், இங்கிலாந்து துணி இந்தியாவிற்குள் நுழைய தடைகள் நிரம்ப இருப்பதாயும், எனவே, இந்தியாவைப்போலவே நாமும் அவர்கள் துணிகளுக்குத் தடை விதிக்க வேண்டும் என்றும் பல அங்கத்தினர்கள் பேசியிருக்கின்றனர்.

மேலும், இந்தியப் பருத்தி, இங்கிலாந்திற்கு வரும் வேறெந்த நாட்டுப் பருத்தியின் அளவைக் காட்டிலும் அதிகமாயிருக்கிறது. இங்கிலாந்திற்கு அந்தப் பருத்தி மீது அதிகமான வரி விதிப்புச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் இல்லாவிட்டாலும், இரு நாடுகளிடையேயும் பருத்தி ஏற்றுமதி இறக்குமதிக்கு ஒரு நியாயமான நிர்ணயம் இருக்க வேண்டும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இந்தியாவிற்குள் இங்கிலாந்து துணிகளில் சில நல்ல ரகங்களாவது நுழைய அனுமதிக்கப்பட்டாலன்றி, இங்கிலாந்து, துணி வர்த்தகத்தில் பெரும் வீழ்ச்சியடையும்—நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படும்—எனவே, ஏதேனும் நல்லது செய்தாக வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

வர்த்தக போர்டில் மந்திரியாயிருக்கும் ஏ. ஆர். டபிள்யூ. லோ என்பவர், இந்திய அரசாங்க மந்திரிகளுக்கு இதுபற்றித் தெளிவாக எடுத்துக் காட்டியிருப்பதாயும், இங்கிலாந்து துணி வர்த்தகத்திற்கு இந்தியாவின் வரி விதிப்புக் கட்டுப்பாடு எவ்வளவு கேடு தருவதாயிருக்கிறது என்பதையும், இதனால் இங்கிலாந்து வர்த்தக உலகில் நிலவுகிற எண்ணம் பற்றியும் அவர் இந்திய மந்திரிகளுக்கு சந்தேகமற விளக்கியிருப்பதாயும் பேசியிருக்கிறார்.

இந்தியாவிலிருந்து அரிசி ஏற்றுமதி!

இவ்வாண்டில், இந்தியா தனது அரிசி சேமிப்புகளிலிருந்து சுமார் 3 லட்சம் டன் அரிசியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யுமென்றும், இந்தியா, வெளிநாடுகளுக்கு அரிசி ஏற்றுமதி செய்யக்கூடிய நிலை அடைந்திருப்பது இதுவே முதல்தடவையாகுமென்றும் இந்திய சர்க்கார் உணவு உதவி அமைச்சர் எம். வி. கிருஷ்ணப்பா தெரிவித்திருக்கிறார்.

ஏற்றுமதி செய்யப்படவிருக்கும் அரிசி, பெரும்பாலும் மத்திய கிழக்கு நாடுகள், பிரிட்டன், சிங்கப்பூர், பார்மோசா ஆகிய இடங்களுக்கு அனுப்பப்படலாமென்றும் அவர் கருத்தறிவித்திருக்கிறார்.

உணவு தானியங்களின் விலைகள் அபரிமிதமாகச் சரிந்து வருவதைத் தடுக்க இந்திய சர்க்கார் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமென்றும், விலைவாசிகள் சரிவதைத் தவிர்த்து நிலையான ஒரு விலையை நிர்ணயிக்க வெளிநாடுகளுக்கு அரிசி ஏற்றுமதி செய்வது பெருமளவு உதவும் என்றும் அவர் மேலும் கூறியிருக்கிறார்.

"நாட்டின் பொதுநலனை முன்னிட்டும் உணவு தானியங்களின் விலைவாசிகள் ஒரேயடியாகச் சரிந்துவிடக் கூடாது; ஏனெனில், அதன் காரணத்தால் விவசாயிகள் வர்த்தகப் பயிர்களில் அதிகக் கவனம் செலுத்த நேரிட்டு, உணவு தானிய உற்பத்தி குறைவேற்படும் அபாயமுமேற்படலாம்,"

என்று, அவர் மேலும் குறிப்பிட்டிருக்கிறார்.

சென்னையிலிருந்தும், ஆந்திராவிலிருந்தும் உபரிகளை வாங்கும் வேலை முன்னேறி வருவதாகவும், அதற்கான முழு பொறுப்பையும், மத்திய சர்க்கார் மேற்கொண்டுள்ளதாகவும், கையிருப்புகளுக்கான கிரயத்தை மத்திய சர்க்கார் மாநில சர்க்கார்களுக்குக் கொடுக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

'பகைவனின் காதலி'— நாடகம் அரங்கேற்றம்

28—1—55-ல், நெல்லை, பாளையங்கோட்டை நகர் மன்றப் பொருட் காட்சியில், தோழர் ஏ. கே. வேலன் எழுதிய 'பகைவனின் காதலி'—என்ற நாடகம் தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் குழுவினரால் அரங்கேற்றப்பட்டு, இரண்டு நாட்கள் நடைபெற்றது. நாடக முடிவில் நகர் மன்றத் தலைவர் எம். எஸ். மகாராசபிள்ளை நடிகர்களுக்கு மலர் மாலை அணிவித்து பாராட்டுரை வழங்கினார். பாளையங்கோட்டை தி. மு. கழகச் சார்பில், தோழர் எம். ஜி. இராமச்சந்திரனுக்கு ஒரு வெள்ளிக் கோப்பை பரிசளிக்கப்பட்டது. நெல்லை மாவட்ட தி. மு. கழகம், நெல்லை நகர் தி. மு. கழகம், மற்றும் தனிப்பட்டோர் சார்பாகவும் எம். ஜி. இராமச்சந்திரனுக்கும், மற்றும் நடிகர்களுக்கும் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன. தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் எல்லோருக்கும் நன்றி தெரிவித்துச் சொற்பொழிவாற்றினார்.

'யார் துரோகி'—நாடகம்

30—1—55 காலை 10 மணிக்கு, சென்னை 98 பி. பி. ரோடு இல்லத்திலுள்ள கலைவளர் நாடக மன்றச் சார்பில், தோழர் கோ. இளவரசு தலைமையில் 'யார் துரோகி'—என்ற நாடகம் துவக்கப்பட்டது. நாடகம் என்பது பற்றித் தோழர்கள் பலர் பேசிய பின் அனைவருக்கும் விருந்து அளிக்கப்பட்டது.

அடக்குமுறை வலுக்கிறது!

கேப்டவுன், பிப். 6—

எந்த வீட்டிற்குள்ளும் 'வாரண்ட்' இன்றியே புகுந்து திடீர் சோதனை நடத்தவும், தனி நபர்களை சோதனை செய்யவும் எதிர்த்தால் பலாத்காரம் உபயோகிக்கவும், அமைதிக்கு பங்கம் ஏற்படுமென சந்தேகிக்கப்பட்டால் மேற்கண்ட நடவடிக்கை எடுக்கவும் போலீசாருக்கு அதிகாரம் அளித்து தென் ஆப்பிரிக்க மக்கள் சபையில் ஒரு மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டில் ஜோகன்ஸ்பர்க் நகரில் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் நடைபெற்றபோது அக்கூட்டத்தில் இரண்டு போலீசார் இருந்தனர். இவர்களை வெளியேற்ற வேண்டுமென ஆப்பிரிக்க தேசிய காங்கிரசார் போராடினர். அதன் எதிரொலியாகவே இந்தப் புதிய மசோதா உருவாகியுள்ளதாம்.

ஆவடி சத்தியமூர்த்தி நகர் மாதிரி காலனியாகுமா?

சென்னை, பிப். 4—

ஆவடியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டினை ஒட்டி புதியதாக உருவாக்கப்பட்ட 'சத்தியமூர்த்தி நகர்,' 'காங்கிர காம்ப்' என்ற

கர்நாடக தி. மு. கழக முதலாவது சமூக சீர்திருத்த, அரசியல் மாநாடுகள்

★

பெங்களூர் கண்டோன்மெண்ட் பிளாக்பள்ளி மைதானத்தில், மஜீத் பந்தலில் கைலாசம் அரங்கில் நடைபெறும்

12—2—55 சனி:

சமூக சீர்திருத்த மாநாடு

தலைவர்: காஞ்சி கல்யாணசுந்தரம்

திறப்பாளர்: ப. உ. சண்முகம்

13—2—55 ஞாயிறு:

அரசியல் மாநாடு

தலைவர்: என். வி. நடராசன்

திறப்பாளர்: தோழியர் அருண்மொழி

இரண்டு நாட்களிலும் பொதுச்செயலாளர் அண்ணாதுரை, தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், கே. ஏ. மதியழகன், ஈ. வெ. கி. சம்பத், மு. கருணாநிதி, க. அன்பழகன், சி. பி. சிற்றரசு, அ. பொன்னம்பலனார், எம். ஜி. இராமச்சந்திரன், எஸ். எஸ். இராசேந்திரன் மற்றும் கழக முன்னணி வீரர்களும் கலந்துகொள்வர்

★

இசைமுரசு நாகூர் அனீபா குழுவினரின் இசை விருந்து உண்டு

மாநாட்டுக் கட்டணம் (இரண்டு நாட்களுக்கும்):

வரவேற்பாளர் ரூ. 3, பிரதிநிதி ரூ. 2, பார்வையாளர் ரூ. 1, பெண்கள் அணு 8

வ. கு. தலைவர்கள்: எஸ். ஜே. உசேன், எஸ். வி. பதி — செயலாளர்கள்: ஏ. டி. பிரான்சிஸ், செ. விழியன் — பொருளாளர்: எம். ஆர். பெருமாள்

விளம்பரக் குழு: கி. சோழன், வெங்கடசாமி — தொ. ப. தலைவர்: ஆர். ராகவன் — துணை: சு. கண்ணன்

சென்னை சட்டசபையில்....

★

புகாருக்காளாகும் சர்க்கார் ஊழியர்

சர்க்கார் ஊழியர்கள் மீது எழுப்பப்படும் புகார்களை, விசாரிக்கும் 'டிரிபியூனல்' சிபாரிசுகள் பற்றியும், அவற்றின் மீது சர்க்கார் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்தும் சட்டசபையில் கேள்விகள் எழுந்தன.

1953—54-ம் ஆண்டில், 26 பேர்களை வேலையிலிருந்து நீக்குமாறு 'டிரிபியூனல்' சிபாரிசு செய்தது என்றும், இதில் 17 வழக்குகள் மேற்கண்ட காலத்தில் எழுந்தவை என்றும், 9 அதற்கு முந்திய காலத்தவை என்றும், அந்த ஆண்டில் 31 ஊழியர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர் என்றும், அவர்களில் 9 பேர்கள் குறிப்பிட்ட கால வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள் — 22 பேர்கள் அதற்கு முந்திய காலத்தில் சிபாரிசு செய்யப்பட்டவர்கள் என்றும் மந்திரி சுப்பிரமணியம் அரங்கநாதனுக்கு பதிலளிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

வேலையிலிருந்து நீக்க வேண்டுமென 'டிரிபியூனல்' சிபாரிசு செய்த தாசில்தார் ஒருவருக்கு ஆச்சாரியார் முதன் மந்திரியாக இருந்தபோது, அப்பதவியைத் திரும்பத் தந்தார் என்றும், அதுபோல இனி நடக்காது என்று சர்க்கார் உறுதிமொழி அளிக்குமா என்றும் கேட்டபோது அம்மாதிரி வாக்குத்தர முடியாது என்று மந்திரி பதிலளித்தார்.

"ஒவ்வொரு வழக்கையும், அதன் தரத்திற்கேற்ப பரிசீலனை செய்து சர்க்கார் முடிவு செய்யும்; சர்க்கார் 'அப்பீல்' பொறுப்புள்ளதாக இருக்கிறது," என்று மந்திரியார் கூறினர்.

★

ஏழைகளுக்கு நிலம்!

நிலமற்ற ஏழைகள், தாழ்த்தப்பட்டவர்கள் ஆகியோருக்கு நிலம் ஜாரி செய்வதைத் துரிதப்படுத்த விசேட நடவடிக்கை எடுக்க திட்டம் தயாரிக்குமாறு 'ரெவினியூ போர்டி'னை தாம் கேட்டிருப்பதாக மந்திரி மாணிக்கவேலர், கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

★

ஆட்குறைப்பு

ஆனைமலை சர்க்கார் சின்கோனா தோட்டங்களில் வேலை குறைந்திருப்பதற்கேற்ப நியாயமான அளவுக்கு தொழிலாளர் எண்ணிக்கை குறைக்கப்பட்டிருக்கிறதென்றும், பல காரணங்களால் விஸ்தரிப்புத் திட்டத்தை அமுல் நடத்த முடியாமலிருப்பதாயும், தோட்ட பராமரிப்பு வேலைக்கே இப்போது தொழிலாளர் தேவையாக இருக்கிறது என்றும், கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மந்திரி பக்தவத்சலம் குறிப்பிட்டிருக்கிறார்.

நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத் திட்டம்

கொழும்புத் திட்ட உதவியா?

சென்னை, பிப். 7—

சென்னை மாகில மின்சாரத் திட்டங்களுக்கும், நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கத் திட்டத்திற்கும், கொழும்புத் திட்டத்தின் கீழ் கனடா தேசத்தின் உதவியைப் பெறும் வாய்ப்புகள் குறித்து இன்று சர்க்கார் காரியாலயத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் விவாதிக்கப்பட்டது.

கொழும்புத் திட்டத்தின்படி, கனடா இந்தியாவிற்கு உதவ ஆண்டொன்றிற்கு $1\frac{1}{2}$ கோடி டாலர் ஒதுக்கியிருக்கிறதாகவும், இந்த $1\frac{1}{2}$ கோடி டாலரும், நாட்டின் பல்வேறு பாகங்களிலுமுள்ள பல்வேறு திட்டங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படுமென்றும் கூறப்படுகிறது.

உப்புத் தொழிலாளர் வெற்றி

தூத்துக்குடி, பிப். 5—

இன்று, தூத்துக்குடி உப்புத் தொழிலாளர் சங்கத் தலைவர் தோழர் கே. வி. கே. சாமியின் அறிக்கைப்படி, பத்தாயிரத்திற்கு மேற்பட்ட உப்புத் தொழிலாளர்களும் குறைந்த கூலியை வாங்காமல், உப்புக் கடைகளின் முன்பாக, 'கூலி கொடு' என்ற கோஷத்துடன் ஆர்ப்பாட்டம் செய்தனர். வீதிகளெல்லாம் ஒரே மக்கள் கூட்டமும், ஆயுதந் தாங்கிய போலீசார் கார்களில் சுற்றிய வண்ணமும் இருந்தனர்.

உப்புத் தொழிலாளர்களின் கூலிப் பிரச்சினையைப் பேசி முடிக்க தோழர் கே. வி. கே. சாமியும், மற்றும் தி. மு. கழகத் தோழர்களும் ஒவ்வொரு கடையாகச் சென்றனர்.

தொழிலாளர்களின் ஆர்ப்பாட்டத்தைக் கண்ட உப்பு முதலாளிகள் பலர் கூலியைக் கொடுத்து விட்டார்கள்; சிலர் கடைகளை மூடிவிட்டிருந்தார்கள்.

போராட்டத்தை உடைக்கக் கம்யூனிஸ்டு கட்சியினர் எடுத்துக்கொண்ட முயற்சி முழுதும் தோல்வியுற்றது.

ஆர்ப்பாட்ட நிகழ்ச்சி மாலை 5 மணி முதல் இரவு 10 வரை நீடித்தும், எவ்வித அசம்பாவிதமும் நடைபெறவில்லை. (ந-நி.)

கோலார் தங்க வயல் தொழிலாளர்கள்

சம்பள விகிதம்

புதுடில்லி, பிப். 7—

மைசூர் கோலார் தங்கச் சுரங்கங்களில் தொழில் நுணுக்கத் திறனற்ற மேல்தளத் தொழிலாளிக்கு நாளொன்றுக்கு குறைந்தபட்ச ஊதியமாக ஒரு ரூபாயும், சுரங்கத்தினுள்ளே வேலை செய்யும் தொழிலாளிக்கு ஒன்றே கால் ரூபாயும் ஊதியம் தரப்பட வேண்டுமென்று தன்பாத்திலுள்ள மத்திய சர்க்கார் தொழில் நீதிமன்றம் உத்திரவிட்டுள்ளது.

சென்ற ஆண்டு (1954) எப்ரல் திங்கள் முதல் தேதியிலிருந்தே புதிய ஊதியங்கள் அமுல் செய்யப்பட வேண்டுமென்றும் மேற்படி நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

தற்போதைய கிராக்கிப்படியில் எவ்வித மாறுதலும் கிடையாது என்றும், கிராஜுடி திட்டம் போன்றவற்றை நிர்ணயிக்க சுரங்கங்களின் தற்போதைய நிதிநிலைமை இடங்கொடுக்கவில்லை என்றும், தகராறு சம்பந்தப்பட்ட 4 சுரங்கங்களில் ஒன்றான ஊரிகாம் சுரங்கத்தில் வேலை செய்யும் தொழிலாளிகள் 1952-ம் ஆண்டிற்குப் போனஸ் பாத்தியதை கொண்டாட முடியாதென்றும், பாக்கியுள்ள நந்திதுர்க்கம், சாம்பியன் ரீப், மைசூர் ஆகிய சுரங்கத் தொழிலாளர்களுக்கும் 1952-ம் ஆண்டிற்கென $2\frac{1}{2}$ மாதம் வீதம் அடிப்படை ஊதியப்படி போனஸ் கொடுக்கப்பட வேண்டுமென்றும், மேற்படி தொழில் கோர்ட் தலைவரான எல். பி. தாவே கூறியிருக்கிறார்.

இரு பிரிவுத் தொழிலாளர்களுக்கும் அதிகபட்ச ஊதியம் ரூ $1\frac{1}{4}$, $1\frac{1}{2}$ என்றும், ஆண்டொன்றுக்கு 1 அணா வீதம் அவர்கள் தினச் சம்பளம் உயர்த்தப்பட வேண்டுமென்றும் கோர்ட் கூறியிருக்கிறது.

கொடைக்கானலில் தேனீ பண்ணை

கொடைக்கானலில் சுமார் ஒன்றரை லட்சம்ரூபாய்செலவில்தேனீ பண்ணை ஒன்று அமைப்பது பற்றி அகில இந்திய காதி போர்டு யோசித்து வருகிறதாம்.

கொடைக்கானலில் இதற்காக 25 ஏக்கரா நிலத்தை சென்னை சர்க்கார் ஒதுக்கிவைத்திருக்கிறதாம். இங்கே தேனீ வளர்ப்பு பற்றிய ஆராய்ச்சி, பயிற்சி, பிரசாரம் இவைகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்படுமாம்.

கழகக் கூட்டம்

★

மேல்மட்டை
விண்ணமங்கலம் கிராமத்தில்
9—2—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: பி. எட்டியப்பன்
பேசுவோர்:
சாஞ்சி கல்யாணசுந்தரம்
கே. டி. எஸ். மணி
பாபு செனார்த்தனம்

திருமணம்

11-2-55 காலை $8\frac{1}{2}$ மணிக்கு, வெட்டுக்காடு கிராமத்தில், தோழர் கி. பெருமாள்—தோழியர் சரோஜனி திருமணம் தோழர் வீ. முனுசாமி, எம்.பி. தலைமையில் நடைபெறும். மணமக்களை வாழ்த்தி பொதுச் செயலாளர் அண்ணாதுரை, தோழர்கள் அ. பொன்னம்பலனார், எ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ., வீ. கோபால கவுண்டர் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

பட்டத்தின் முடிவை பிள்ளையார் சிலை எதிர்பார்க்கிறது!

திருவனந்தபுரம், பிப். 7—

தென் திருவிதாங்கூரில் உள்ள பி.-சோ. கட்சியின் ஆதரவாளர்கள், இப்போது சர்க்காரில் காணப்படும் நெருக்கடி நிலைமை தீர்ந்துவிட்டால் பிள்ளையார் சிலை ஒன்றின் எதிரே 1000 தேங்காய்களை உடைப்பதாக உறுதி எடுத்துக்கொண்டிருந்தார்களல்லவா?

பிப்ரவரி 6-ந் தேதி இந்த உறுதி நிறைவேற்றப்படல் வேண்டும்: ஆனால், 8-ந் தேதியன்றுதான் பட்டம் மந்திரி சபையின் முடிவு தெரிய இருக்கிறது. இதன் மூலம் பிள்ளையார் சிலை மேலும் சிலநாள் காத்துக்கொண்டிருக்கிற நிலை ஏற்பட்டதாம்.

குழித்துறையில் உள்ள தோழர்கள், இப்படி எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்களாம்!

அவர்களும்

கட்டுப்பட்டவர்கள்தான்!

"நீதிமன்றத்தின் கட்டுப்பாடுகளுக்கு முன்னாள் சமஸ்தான மன்னர்களும் கட்டுப்பட்டவர்கள்தான்; அவர்கள் தங்களுக்கென விசேட உரிமைகள் கொண்டாட முடியாது,"

என்று பம்பாய் மாகில உயர்நீதி மன்ற நீதிபதி, முன்னாள் மன்னர் ஒருவரது மனு ஒன்றின் மீது தீர்ப்பளித்துக் கூறினார்.

சௌராஷ்டிராவிலுள்ள ஜோத்பூர் சமஸ்தானத்தின் முன்னாள் மன்னரான தர்பார் சாஹப் சுரக்வாலா, ஒரு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி மீது கீழ்க் கோர்ட்டில் வழக்கொன்று தொடர்ந்திருந்தார். இவ்வழக்கு சம்பந்தமாகக் கோர்ட்டில் ஆஜராவதிலிருந்து தமக்கும், தமது மனைவிக்கும் விலக்களிக்கும்படியும், தங்களை கமிஷன் ஒன்றின் மூலமாக விசாரிக்கும்படியும் கோரிக்கொண்டு மனுச் செய்திருந்தார்.

இம்மனுவை கீழ்க் கோர்ட் நிராகரித்துவிடவே, அதை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் 'அப்பீல்' செய்துகொண்டார்.

இந்த அப்பீல் மனுவைத் தள்ளுபடி செய்து, உயர் நீதிமன்ற நீதிபதி மேற்குறிப்பிட்டுள்ளவாறு தெரிவித்தார்.

சிற்சில நிபந்தனைகளின் பேரில் சில சந்தர்ப்பங்களில் சர்க்காரே விதி விலக்களிக்கலாமேயொழிய, கோர்ட்டிடம் விதிவிலக்கு கோர யாருக்குமே உரிமை கிடையாது என்று உயர்நீதி மன்றம் குறிப்பிட்டுள்ளது.

பார்மோசா பிரச்சினை:

காமன்வெல்த் பிரதமர்களிடையே வேற்றுமையும்-ஒற்றுமையும்

லண்டன், பிப். 7—

மக்கள் சீனாவை அடுத்துள்ள கரையோரப் பகுதிகளிலுள்ள சியாங் வசமிருக்கும் தீவுகள் யாவும் மக்கள் சீனாவுக்குச் சேரவேண்டியதே என்று காமன்வெல்த் பிரதமர்கள் ஒருமனதாகக் கருதுகின்றனரென தெரியவருகிறது.

பார்மோசா, பெஸ்கடோரஸ் ஆகிய தீவுகள் யாருக்குச் சொந்தம் —அவைகளின் எதிர்காலம் இவை பற்றி காமன்வெல்த் பிரதமர்களிடையே கருத்து வேற்றுமை நிலவிற்றும். பார்மோசா தீவு யாருக்குச் சொந்தம் என்பதில் இறுதியான ஒரு முடிவு காணவேண்டுமென்று கூறும் பிரிட்டனின் கருத்தை அநேகமாக எல்லா பிரதமர்களும் ஆதரித்துள்ளனராம். ஆனால், பார்மோசா தீவு மக்கள் சீனாவுக்கே (செஞ்சீனா) சேரவேண்டுமென்பதை இந்தியப் பிரதமர் நேரு ஆதரித்துள்ளார்.

பார்மோசா தீவு பற்றிய விஷயங்களில் அவர்களுடே வேற்றுமைகள் காணப்பட்டாலும் பார்மோசா போர் நிறுத்தத்தைப் பற்றிய விஷயத்தில் மட்டும் அவர்களிடையே கருத்து ஒற்றுமைகள் இருந்ததாகக் கூறப்படுகிறது.

இங்கிலாந்திலுள்ள சீனத் தூதுவர் வேண்டுகோளுக்கிணங்கி பண்டித நேரு, அவரை இன்று இரண்டாவது முறையாகச் சந்தித்து பார்மோசாத் தீவு பற்றிப் பேசியிருக்கிறார்.

இன்று காலை, டாச்சென் தீவிலிருந்து 280 தேசியச் சீன (சியாங்) கொரில்லா துருப்புகளுடன்: சீனக் கப்பலொன்று வடபார்மோசாவிலுள்ள கில்ஸ் துறைமுகத்திற்கு வந்துசேர்ந்திருக்கிறது. இது தவிர, சுமார் 700 அமெரிக்க 'ஜெட்' விமானங்கள், மற்ற விமானங்களின் பாதுகாப்புடன் தேசியச் சீன துருப்புகள் டாச்சென் தீவை விட்டு வெளியேற ஆரம்பித்தன.

இதனிடையே, இன்று காலை டாச்சென் தீவுகளுக் கருகில் ஒரு 'மர்ம சப்மரீன்' காணப்பட்டதாகவும், அது எங்கிருந்து வந்ததென்பது புலனாகவில்லை என்றும் கூறப்படுகிறது.

அதே நேரத்தில், டாச்சென் தீவுக்கருகில் 40 கல் தொலைவிலுள்ள சான்மென் பே எனும் இடத்தில் மக்கள் சீனத் துருப்புகள் குவிந்து வருவதாக தேசியச் சீனர்கள் (சியாங்) தெரிவித்திருக்கின்றனர்.

டாச்சென் தீவிலிருந்து 115 - சோல்ஜர்களும், 65 விமானப் படைச் சிப்பந்திகளும் பார்மோசா வந்து சேர்ந்திருக்கின்றனர்.

டாச்சென் தீவுகளிலிருந்து மொத்தம் 468 பேர் வந்திருக்க வேண்டுமென்றும், ஆனால் அங்கே ஒரே குழப்பமாக இருந்தபடியால் பாக்கிப் பேரை அங்கேயே விட்டு வரவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டதாகவும் அவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

பெரிலி அருகே ரயில் விபத்து

பெரிலி, பிப். 7—

லக்னோ—காஸ்கஞ்ச் பாசஞ்சர் ரயில் வண்டி இன்று காலை கோர விபத்தொன்றுக்கு உள்ளாகியதினால் 5 பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

இந்த விபத்து வடகிழக்கு ரயில்வேயில் சேய்தாலுக்கும் ஷோஜிபுராவுக்கும் இடையில், பெரிலியிலிருந்து 16 மைல் தொலைவில் ஏற்பட்டது.

3-வது வகுப்பைச் சேர்ந்த 4 பெட்டிகள் கவிழ்ந்தன. என்ஜினுக்குப் பின்புறமிருந்த 2 பெட்டிகள் தான் தூளாக நொறுங்கினவாம்.

விபத்து பற்றிய மேல்விபரங்கள் பூராவும் இன்னும் தெரியவில்லை. 300 அடி தூரத்திற்கு ரயில் தண்டவாளம் பெயர்க்கப்பட்டு விட்டதாம்.

கொல்லப்பட்ட மூவரில் இருவர், 'ட்ராலி'க்காரர்கள் என்றும் ஒருவர் ஆர். எம். எஸ். ஊழியர் என்றும் தெரிகிறது.

ஈராக்-துருக்கி ஒப்பந்த எதிரொலி

சிரியா மந்திரி சபை ராஜினமா

கெய்ரோ, பிப் 7—

சிரியாவில் பாரஸ்அல் கவுரியை பிரதமராகக்கொண்டு இயங்கிவந்த மந்திரி சபை ராஜினமா செய்து விட்டதாகத் தெரிகிறது. சரியாக 4 மாதங்கள் கூட இந்த மந்திரி சபை பதவி வகிக்கவில்லை.

உத்தேச ஈராக்—துருக்கி இராணுவ ஒப்பந்தத்தை இந்த மந்திரி சபை எதிர்த்துவந்தது.

இந்த ஒப்பந்தத்தை எகிப்து எதிர்த்து வருகிறது.

இது பற்றி எகிப்து—ஈராக் ஆகிய இரு நாட்டிற்குமிடையே இருந்துவரும் கருத்துவேற்றுமைகளைப் போக்க அரபு பிரதமர்கள் முயற்சித்து வருகிறார்கள்.

சிரிய மந்திரி சபையின் ராஜினமா மேற்கண்ட முயர்சிக்கு உதவியாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

திரிகோணமலையில் போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம்

கொழும்பு, பிப். 7—

ஆத்திரம் கொண்ட 200 பேர் அடங்கிய கூட்டமொன்றைக் கலைக்க போலீசார் திரிகோணமலையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று தெரிகிறது. ஒருவர் காயம்பட்டாராம்.

இராமலிங்கம் என்ற ஒருவரை கூட்டத்தவர் தாக்க முற்படுகையில், அவரைக் காப்பாற்ற போலீசார் முயற்சித்திருந்தார்களாம். அதைக்கண்டு கோபங்கொண்ட கூட்டத்தவர், தங்கள் கைவசம் இருந்த நாட்டு வெடிகுண்டுகளை வீச முற்பட்டிருக்கின்றனர். நிலைமையைச் சமாளிக்க போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கின்றனர்.

போலீசார் நகரெங்கும் பாரா செய்து வருகின்றனராம்.

சம்பவம் பற்றி விசாரணையும் நடைபெறவிருக்கிறதாம்.

பரோடா மாணவர் வேலை நிறுத்த முடிவு

பரோடா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 3,000 மாணவர்கள் கடந்த பத்து தினங்களாக மேற்கொண்டிருந்த வேலை நிறுத்தம் முடிவடைந்துவிட்டதாகத் தெரிகிறது.

மாணவர் சங்கத்திற்குப் பல்கலைக் கழக அதிகாரிகளுக்குமிடையே ஒரு சமரச ஏற்பாடு உருவாகியுள்ளதாம்.

5 பேர் மேற்கொண்டிருந்த உண்ணாவிரதம்கூட நிறுத்தப்பட்டு விட்டதாம்.

இரண்டு மாணவர்கள் சமூக சேவைப் பட்டப்படிப்பிலிருந்து நீக்கப்பட்டது குறித்து விசாரிக்க எட்டு பேர் கொண்ட குழு நியமிப்பதாயும் அந்தக் குழுவின் முடிவுகளை ஏற்றுக்கொள்வது என்றும் பல்கலைக் கழக அதிகாரிகள் கூறியிருக்கின்றனராம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம்.ஏ.